அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.97/2016
19.05.2016

# பத்திரிக்கைச் செய்தி

## மீண்டும் முதலமைச்சராக பதவியேற்றிருக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவரின் வாழ்த்துச்செய்தி.

நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில், மக்களின் பேராதரவுடன் மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அரியணையில் அமர்ந்திருப்பது மிக்க மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

1984 முதல் எந்த ஒரு கட்சியும், இரண்டாவது முறையாக ஆட்சியை கைபற்றாத நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்நிலையை மாற்றி, தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியை பிடித்து ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள். 2011 தேர்தலில் மகத்தான வெற்றி, 2014 நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி என்பதை தொடர்ந்து, 2016 சட்டமன்றப் தேர்தலில் மகத்தான வெற்றி என்ற மாபெரும் சாதனையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நிகழ்த்தியுள்ளார்கள்.

பல்வேறு எதிர்ப்புகள் இருந்த போதும், பல்வேறு கூட்டணிகள் அமைத்து எதிர்த்தபோதும், மக்களின் பேராதரவு பெற்ற, தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்படும் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தான் என்பதை இத்தேர்தல் நிருபித்திருக்கிறது. கடந்த 5 ஆண்டு காலத்தில் அவர்கள் நிகழ்த்திய சாதனைகளுக்கும், இனிமேல் நிகழ்த்தவிருக்கும் சாதனைகளுக்கும் மக்கள் அளித்திருக்கும் பேராதரவு தான் இந்த மகத்தான வெற்றி.

அந்த வகையில் மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மக்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் கடந்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றித் தந்ததுபோல், தொடர்ந்து நிறைவேற்றித் தந்து மக்கள் போற்றும் முதலமைச்சராக, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றித் தரவல்ல முதலமைச்சராக என்றென்றும் திகழவேண்டும் என்கின்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு, என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர்களுக்கும், பெருவாரியாக வாக்களித்த தமிழக வாக்காள பெருமக்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தேர்தலில் அயராது பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக தொண்டர்களுக்கும் சமத்துவ மக்கள் கட்சியின் தொண்டர்களுக்கும், கூட்டணி கட்சியின் தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்செந்தூர் தொகுதியில் எனக்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



**ஆர்.சரத்குமார்**